# கேள்வி:

## "சபையின் அங்கத்தினர்கள் ஐக்கியமாக இருக்க வேண்டுமா?"

# பதில்:

யோவான் 17ல், இயேசு தம்மைப் பின்பற்றி, தம்முடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிகிற அனைவருடைய ஐக்கியத்திற்காக ஜெபித்தார்: "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்'' (வ. 20, 21). பவுல், கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, சகோதரர்கள் மத்தியில் ஐக்கியம் இருக்க வேண்டும் என்றெழுதினார்.

## நாம் சகோதரத்துவமாய் இருக்கிறோம்

கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்கள், ஒருவர் ஒருவருடன் எவ்வித உறவு கொண்டிருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்வதற்கு உதவிசெய்ய வேறுபட்ட விளக்கங்களைப் பவுல் பயன்படுத்தினார். பாவத்திலிருந்து வெளியேறி, தேவனுக்கு முன்பாகப் பரிசுத்த வாழ்க்கையை வாழ்வதற்கு அழைக்கப் பட்ட வகையில், அவர்கள் பரிசுத்தவான்கள் எனப்பட்டனர் (1 கொரி. 1:2). ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கும் வகையில், பவுல் அவர்களை ஒரு சரீரத்தின் அவயவங்கள் என்று விளக்கினார் (1 கொரி. 12:12, 27). வேறு எதைக்காட்டிலும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட விளக்கம்: அவர்கள் ஒரே குடும்பத்தின் உறுப்பினர்கள், இவ்விதமாய் அவர்கள் சகோதரத்துவத்துடன் உள்ளனர். அவர் குறைந்தபட்சம்

*இருபது முறைகள் இப்படி அவர்களை அழைத்தார் (1:10, 11, 26; 2:1; 3:1; 4:6; 7:24, 29; 10:1; 11:33; 12:1; 14:6, 20, 26, 39; 15:1, 31, 50, 58; 16:15). மேலும் அவர், உயிர்த்த கிறிஸ்து "ஐநூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில்'' தரிசனமானார் (1 கொரி. 15:6) என்றும் எபேசுவிலிருந்த "சகோதரரெல்லாரும்" உங்களை வாழ்த்துகிறார்கள் (1 கொரி. 16:20) என்றும் எழுதினார்.*

*கொரிந்துவிலிருந்த சகோதரர்கள், மாம்சப் பிரகாரம் ஒரே குடும்பத்தவர்கள் அல்ல. "கர்த்தருடைய சகோதரர்" (1 கொரி. 9:5) என்று பேசும்போது, பவுல், மாம்சப் பிரகாரமான குடும்பத்தைப்பற்றிக் குறிப்பிட்டார். இயேசுவின் அரை சகோதரர்களும், யோசேப்பு மற்றும் மரியாள் இவர்களுடைய குடும்பத்தில் இருந்தவர்களுமாகிய "யாக்கோபு,யோசே, யூதா மற்றும் சீமோன்" (மாற்கு 6:3) ஆகியோரைப் பவுல் சிந்தித்துக் கொண்டிருந்தார். மாம்சப் பிரகாரமான குடும்பத்தில் நிலவும் உறவானது, கொரிந்துவிலிருந்த, தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தில் சில வகையில் குறிப்பிடத்தக்கதாயிருக்கும் என்று பவுல் எண்ணினார்.*

*ஒரு வீட்டார் (யோசேப்பு, மரியாள் மற்றும் அவர்களின் பிள்ளைகள்), குடும்பம் என்று அழைக்கப்படும் கருத்தைப் பார்க்கிலும், ஒருவருடைய பின் சந்ததிகள் யாவரும் அவரின் குடும்பத்தார் என்று அழைக்கப்படும் கருத்து சற்று விசால மானதாகும். ஒவ்வொரு யூதரும், தமது குடும்பத்தின் ஆரம்ப நபராக ஆபிரகாமையே பின்னோக்கிப் பார்த்தனர் (மத். 3:9). அனனியா, பவுலை "சகோதரனே" என்று அழைக்கையில் (அப். 9:17), தேசத்தின் பாணியில் குடும்ப உறவைப் பயன் படுத்தினார். சவுல், அனனியாவின் யூத சகோதரனாகவும், ஞானஸ்நானத்திற்குப் பிறகு கர்த்தருக்குள் அனனியாவின் சகோதரராகவுமானார்.*

## நாம் ஒரு ஆவிக்குரிய குடும்பம்

*ஒரு மனிதனுடைய இயற்கையான குடும்பம் மற்றும் நாட்டளவான குடும்பம் ஆகிய விளக்கங்களின்மேல் கட்டப்பட்டு, கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆவிக்குரிய குடும்பமாகின்றனர் என்று பேசப்படுவது பரிசுத்த ஆவியானவரைப் பிரியப்படுத்துகிறது. வேறு எந்த விளக்கமும்*

முழுமையானதல்ல, ஆனால் இந்த ஒப்புவமை பொருளுடையதாகும். ஆவிக்குரிய குடும்பத்தில், தாய் என்று அழைக்க தேவனுடைய மனைவியாக எவரும் இல்லை, ஆனால் தகப்பன் ஒருவர் இருக்கிறார் (1 யோவா. 3:1), ஒரு மூத்த சகோதரரும் இருக்கிறார் (ரோமர் 8:29), மற்றும் சகோதரர்களும், சகோதரிகளும் இருக்கின்றனர் (எபி. 2:11).

ஆவிக்குரிய வகையில், தேவனுடைய வசனத்தினால் (1 பேது. 1:23) பாவிகள், பிதாவாகிய தேவனால் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகின்றனர் (யாக். 1:18), இது ஆவியினாலும், ஜலத்தினாலும் மறுபடியும் பிறப்பதன் மூலம் (யோவா. 3:5) நடைபெறுகிறது. மூத்த சகோதரருக்கு அவர்கள் யாவரும் சகோதர, சகோதரிகள் ஆகின்றனர் (அவர், அவர்களை சகோதரரென்று அழைக்க வெட்கப்படவில்லை; எபி. 2:11).

## நாம் அன்பினால் ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளோம்

மாம்சத்திற்குரிய ஒரு நல்ல குடும்பம் சகோதர அன்பில் சந்தோஷமாயிருப்பது போலவே, தமது ஆவிக்குரிய குடும்பம் சகோதர அன்பில் களிகூருவதற்காக தேவன் திட்டமிட்டார். *பிலதெல்பியா* என்ற கிரேக்க வார்த்தைக்கு "சகோதர அன்பு" என்று பொருள், ஆசியாவில் இருந்த ஏழு சபைகளில் ஒன்று இந்நகரில் இருந்தது (வெளி. 3:7), அமெரிக்கப் பெருநகரம் ஒன்றின் பெயர் இதைத் தழுவி, "சகோதர அன்பின் நகரம்" என்பதாக வைக்கப்பட்டுள்ளது. *பிலதெல்பியாவைப்பற்றிப்* பரிசுத்த ஆவியானவர் அதிகமாய் எழுதியிருப்பதில் வியப்பேதுமில்லை.

> *சகோதர சிநேகத்திலே (பிலதெல்பியா)* ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள் (ரோமர் 12:10).

> *சகோதர சிநேகத்தை (பிலதெல்பியா)* க் குறித்து நான் உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை; நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்குத் தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே. அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்குமுள்ள சகோதரரெல்லாருக்கும் செய்து வருகிறீர்கள். ... (1 தெச. 4:9-11).

> *சகோதர சிநேகம் (பிலதெல்பியா)* நிலைத்திருக்கக்கடவது (எபி. 13:1).

*ஆகையால், நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர் களாகும்படி (பிலதெல்பியா), ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள் (1 பேது. 1:22).*

# நாம் ஐக்கியத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும்

### ஐக்கியம், சந்தோஷமும் நன்மையுமானது

*இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது*
*எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?*
*அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு,*
*அவனுடைய தாடியிலே வடிகிறதும்,*
*அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்,*
*எர்மோன்மேலும்,*
*சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது;*
*அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும்*
*ஜீவனையும் கட்டளையிடுகிறார் (சங். 133:1-3).*

சில விஷயங்கள் நமக்கு நன்மையானவை, ஆனால் சந்தோஷமானவையல்ல: எடுத்துக்காட்டாக, நற்கிரியைகள் (தீத்து 3:14ஐக் காண்க) மற்றும் சிட்சை (நீதி. 13:24; எபி. 12:11). சில விஷயங்கள் நமக்கு சந்தோஷமானவை, ஆனால் நமக்கு நன்மையானவையல்ல: "பாவ சந்தோஷம்" (எபி. 11:25), அதிகத் தூக்கம் மற்றும் போஜனப் பிரியம் (நீதி. 6:10, 11; 23:21). யாரோ ஒருவர், தாம் அனுபவிப்பது அனைத்தும், சட்ட விரோதமானதாகவோ, ஒழுக்கமற்றதாகவோ அல்லது கொழுக்கச் செய்வதாகவோ இருப்பதாகக் கூறினார்! ஒரு விஷயம் நமக்கு சந்தோஷமளிப்பதாகவும், அதே வேளையில் நன்மையானதாகவும் இருக்கிறது: அது, ஏக சிந்தனையோடும் ஏக ஆத்துமாவாகவும் சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுவதேயாகும்.

ஐக்கியத்தின் சந்தோஷத்தைக் காண்பதற்கு நமக்கு உதவி செய்வதற்காக, பரிசுத்த ஆவியானவர், வெள்ளைப்போளம், இலவங்கம், கருவாப்பட்டை ஆகியவைகளுடன் கலக்கப்பட்ட

சுகந்த வாசனைத் தைலத்தை விளக்கப் பொருளாகப் பயன்படுத்துகிறார் (யாத். 30:23-33). இக்கலவையானது, ''பரிமளக்காரன் செய்வதுபோல, கூட்டப்பட்ட பரிமள தைலமாகிய, சுத்தமான அபிஷேகத் தைலமாயிருந்தது.'' ஆசாரியர் தவிர வேறுயாரும் இந்த அபிஷேகத்தைப் பெறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. கடந்து செல்லும் ஒவ்வொரு ஆசாரியனும் விட்டுச் செல்கிற சுகந்த வாசனை யானது சகோதர ஐக்கியத்தின் சுகந்த வாசனைக்கு ஒப்பிடப் பட்டது.

சகோதர ஒருமைப்பாட்டைப் புகழ்ந்துரைக்க இரண்டாவது விளக்கம் ஒன்று தாவீதினால் பயன்படுத்தப் பட்டது: எர்மோன் மலையிலிருந்து (9,200 அடி உயரம் உள்ளது) விண்பனி உருகும்போது, தெற்கு முகமாக 120 மைல்கள் தூரம் வரை அதன் பனிப்புகை பரவி, சீயோன் மலை மேல் (2,500 அடி உயரம் உள்ளது) பனித்துளிகளாக இறங்கும். எருசலேமிலிருந்த யூதர்கள், தங்கள் நிலங்களில் பனித்துளிகளையும், மலர்களையும் பார்க்கும்போது, நன்மையும், சந்தோஷமும் அவர்களிடம் எதிரொலிக்கும். நற்சிந்தனையுள்ள எந்த ஒரு மனிதரும், சகோதரர்கள் ஒருமித்து வாசம்செய்து, பணிபுரிவதைப் பார்க்கையில் இவ்வித பதில்செயல் செய்தாகவே வேண்டும்.

**உடன்பாடின்மை அழகற்றது**

சகோதரர்கள் இணைந்து வாழ்ந்து, பணிபுரியாத அழகற்ற நிலை, காயீன் தன் சகோதரனைக் கொலை செய்தல், மற்றும் இருபது வயதுள்ள இஸ்மவேல் தனது சகோதரன் பால்குடி மறக்கப்பண்ணப்பட்டபோது ஏளனம் செய்தல் (ஆதி. 4:8; 21:9) ஆகிய நிகழ்ச்சிகளில் காணப்படுகிறது. அதே போல், ஏசா தன் சேஷ்ட புத்திர பாகத்தை தன் சகோதரனாகிய யாக்கோபுக்கு விற்ற பின்பு, "ஏசா யாக்கோபைப் பகைத்தது" (ஆதி. 27:41) மற்றும் அவனைக் கொலை செய்யத் திட்டமிட்டது இவற்றில் வியப்பேதும் இல்லை. சகோதரருக் குள் விரோதத்தை உண்டு பண்ணுகிறவன் கர்த்தருக்கு அருவருப்பானவன் (நீதி. 6:16-19). இப்படிப்பட்ட எச்சரிக்கை களும், முன் உதாரணங்களும் இருந்தாலும், ''ஒருவரை யொருவர் கடித்துப் பட்சிக்கிற" சகோதரர்களும், சகோதரி களும் இருக்கிறார்கள், "கள்ள சகோதரர்களும் இருக்கிறார்கள் (கலா. 5:15; 2:4).

***பிரிவு என்பது சமாதானம் நிறைந்ததாய் இருக்கலாம்***

*ஒன்றுகூடி வாழ்வது முக்கியமானது போலவே, பிரிந்து வாழ்வதைக் காட்டிலும் மோசமான சில விஷயங்களும் உள்ளன: நாயும்-பூனையும் போல வாழ்ந்து, ஒருவரையொருவர் கடித்து, பட்சிக்கும்போது இரு சகோதரர்களும் தங்கள் ஆத்துமாவை இழந்து விடுகின்றனர். ஞானமுள்ள ஆபிரகாம், லோத்தின் மக்களோடு இணைந்திருந்தால் என்னவாகும் என்பதை உணர்ந்து, நட்புறவுடன் பிரிந்துபோக ஆலோசனை கூறினார். எந்த சூழ்நிலையிலும் சண்டையை அனுமதிக்கக் கூடாது என்பதை அவர் அறிந்தார், "ஏனெனில் நாம் சகோதரர்'' (ஆதி. 13:8). பிரிவினை என்பது முழு நிறைவானது அல்ல, ஆனால் இரு தீங்குகளில் குறைவான வலுவுள்ளது, எனவே ஆபிரகாம் அதிலிருந்து வெளிவர நன்மையானதைச் செய்தார்.*

*பவுலுக்கும், பர்னபாவுக்கும் "கடுங்கோபமூண்ட பொழுது" (அப். 15:39), அவ்விரண்டு மாபெரும் சகோதரர்களுக்குக்கூட ஏக சிந்தையில்லாது போனபோது, அதிக நன்மை நடக்கும் படியாக ஒரு பிரிவு உண்டாயிற்று. அதேபோல், சில சபைகளில், ஒருவருக்கொருவர் சச்சரவிட்டுக் கொள்வதற்குப் பதிலாக, கர்த்தருடைய ஊழியத்தை மேலும் சிறப்பாகச் செய்ய, பிரிந்து செல்லுதல் வழிவகுக்கின்றது.*

***நீதியுடைமை பிரிந்து செல்லுதலை வலியுறுத்தக் கூடும்***

*மேற்கூறிய உதாரணங்களில், பிரிவினைக்கு சரியான அல்லது தவறான கொள்கைகள் தேவைப்படவில்லை. ஆனால், ஒன்றித்திருப்பது தவறானதாகும் என்பதற்குச் சில உதாரணங்கள் உள்ளன. கொரிந்து சபையில் ஒரு சகோதரனை ஐக்கியத்தை விட்டு நீக்குவது சந்தோஷமற்றதாயிருந்தது, ஆனால் அப்படிப்பட்ட ஒருவரை ஐக்கியத்தில் வைத்துக் கொள்ள அவர்கள் கொடுத்த விலை மிகப் பெரியதாயிருந்தது (1 கொரி. 5:13).*

*விருத்தசேதனம்பற்றிய விசாரிப்பைக் குறித்து, பவுல், எருசலேமிலிருந்த யூத கிறிஸ்தவர்களுடன் ஒன்றிப்பையே விரும்பினார். அவர் எப்பொழுதுமே, எல்லாருக்கும் எல்லாமுமாகவே முயற்சி செய்தார் (1 கொரி. 9:22). இருப்பினும், புறஜாதி கிறிஸ்தவர் ஒருவர் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் என்றபோது, பவுல், ஐக்கியத்திற்கான இந்த விலை*

மிகவும் அதிகம் என்றெண்ணினார். "சுவிசேஷத்தின் சத்தியம். ... நிலைத்திருக்கும்படி, நாங்கள் ஒரு நாழிகையாகிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இணங்கவில்லை'' (கலா. 2:5) என்று பவுல் அவ்வாறு கோரிய சகோதரர்களிடம் இணங்க மறுத்தார். ஐக்கியத்தின் பெயரால், இன்றைய நாட்களில் சகோதரர்கள், வேத வகுப்பு வேண்டாம், சபை உதவியுடன் நடக்கும் குழந்தைகள் இல்லம் வேண்டாம், சபை ஒத்துழைப்பு வேண்டாம் என்று கூறுகின்றபோது, அவர்கள் மனித சட்டங்களை உருவாக்குபவர்களாகிவிடுகின்றனர். சபையானது தனது சுயாதீனத்தில் உறுதியாய் நிற்க வேண்டும் (கலா. 5:1ஐக் காண்க) என்று நம்புபவர்கள், அதன் விளைவாகப் பிரிவினை ஏற்பட்டாலும், வேத பாட வகுப்புகள், அனாதைகள் பராமரிப்பு, மற்றும் சபை ஒன்றிணைந்து செயல்படும் நற்காரியங்களுக்கு உடன்பட மாட்டார்கள்.

இதேபோல், கள்ள உபதேசத்தைப் பொறுத்தமட்டில், ஒவ்வொரு நபரும் தாம் நீடிய பொறுமையாயிருப்பது எவ்வளவு காலம் பயனுள்ளதாயிருக்கும் என்று அவரே முடிவு செய்ய வேண்டும். வேத ரீதியாக பரலோகத்தின் கட்டளைகள் நிறைவேற்றப்படுகிற காலம் ஒன்று வருகிறது: ''அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களைவிட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" (ரோமர் 16:17).

## "ஊழியக்காரருக்காக இருப்பதை" நாம் தவிர்க்க வேண்டும்

1 கொரிந்தியர் நிருபத்தில், அந்நகரில் இருந்த தேவனுடைய மக்கள் "ஊழியக்காரருக்காக" என்று இருந்த மோசமான நிலை தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. "நான் பவுலைச் சேர்ந்தவன்" என்றும் ''நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன்'' என்றும் ''நான் கேபாவைச் சேர்ந்தவன்'' என்றும் மற்றும் ''நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன்'' என்றும் அங்கு பிரிவினைகள் இருந்தன (1 கொரி. 1:12).

"ஊழியக்காரருக்காக" இருப்பதென்பது பாவம் என்றாலும், ஊழியக்காரர்கள் முக்கியமானவர்கள் என்பது உண்மையே.

பாவிகளை அவர்களின் இரட்சகரிடம் கொண்டுவர இணைப் புச் சங்கிலியாக இவர்கள் இருந்து, இவ்விதமாய் பரலோகத்தின் திட்டத்தில் ஒரு பாகமாகின்றனர் (ரோமர் 10:13-15). இருப்பினும், ஊழியக்காரர்கள் தங்களில் தாங்களே குறிப்பிடத் தக்கவர்கள் அல்ல. அவர்கள் சுயமாக கிருபையை அளிக்க இயலாது. பவுல் பின்வருமாறு எழுதினார்:

> பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே. நான் நட்டேன், அப்பொல்லோ நீர் பாய்ச்சினான், தேவனே விளையச் செய்தார். அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும் (1 கொரி. 3:5-7).

பல நூற்றாண்டுகளாக, தெரிவிக்கப்படாத மக்கள், பலமான ஊழியருடைய ஆளுமைத் தன்மைகளினால் அடித்துச் செல்லப்பட்டு, கிறிஸ்துவைக் காண்பதற்குப் பதிலாக, மனிதத் தலைவர்களை அதிகமாய்க் கண்டு கொண்டிருக்கின்றனர்.

## முடிவுரை

கிறிஸ்தவர்கள் என்ற முறையில், பாராட்டும் விதத்தில் நமக்குக் கற்றுக் கொடுத்த ஒரு ஊழியர் அல்லது தலைவர்மேல் நமது கவனத்தைச் செலுத்தி அவருக்கு விசுவாசமாயிருப்பதை விட்டு, கிறிஸ்துவின்மேல் கண்ணோக்கமாய் இருந்து, அவரிடத்தில் விசுவாசம் வைக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில், அப்போஸ்தலருடைய உபதேசத்தில் மட்டுமே (அப். 2:42) இயேசுவை மையப்படுத்தும் ஒருமைப்பாட்டின் தரம் காணப்படுகிறது. மத சத்தியம் எது என்றும், வஞ்சகத்தின் ஆவி எது (1 யோவா. 4:6) என்றும் நாம் இதன் மூலம் கற்றுக் கொள்கிறோம். புதிய ஏற்பாட்டில் மட்டுமே “விசுவாசத்தில் ஒருமைப்பாடு’’ சாத்தியமாகும் (எபே. 4:13). ‘‘வழியும், சத்தியமும், ஜீவனுமாக” (யோவா. 14:6) உள்ள கிறிஸ்துவை நாம் மையமாகக் கொள்ளவேண்டும். இதை நடைமுறைப் படுத்த நாம் ‘‘சத்திய வசனமாகிய சுவிசேஷத்தை’’ (கொலோ. 1:5) பெரிய அளவில் காண்பிக்க வேண்டும்.